தினமணி
எமது செய்தியாளர்களை தொடர்புகொள்ள

கோவை	94425 04156
மேட்டுப்பாளையம்	94878 42563
பெ.நா.பாளையம்	98425 63953
சூலூர்	98422 44599
அன்னூர்	91502 49095
பொள்ளாச்சி	89034 44119
மதுக்கரை	73735 45727
வால்பாறை	94863 24619

தினமணி
சந்தா குறித்த விவரம் மற்றும் புகார்களுக்கு...

கோயம்புத்தூர்	: 97902 12447
மேட்டுப்பாளையம் & அன்னூர்	: 77088 26235
சூலூர்	: 73730 55255
மதுக்கரை	: 88701 48269
பொள்ளாச்சி	: 90435 00177
உதவி மைய எண்	: 88070 00216

ராணுவ தளவாட கண்காட்சி நாளை தொடக்கம்

கோவை, மே 26: கோவையில் ராணுவ தளவாட கண்காட்சி செவ்வாய்க்கிழமை (மே 28) தொடங்குகிறது.

இந்திய ராணுவத்தில் பயன்படுத்தபடும் பொருள்கள் மற்றும் ராணுவ தளவாடங்கள், உள்நாட்டில் தயாரிக்கப்படும் பாதுகாப்புத் துறை உபகரணங்கள் தொடர்பான கண்காட்சி கோவை, கொடிசியா அரங்கில் மே 28-ஆம் தேதி தொடங்கி 2 நாள்களுக்கு நடைபெறவுள்ளது.

இந்திய ராணுவத் துறையுடன் கொடிசியா டிபென்ஸ் இன்னோவேஷன் மற்றும் அடல் இன்குபேஷன் மையம் இணைந்து சதர்ன் ஸ்டார் ஆர்மி அகாதெமி இண்டஸ்ட்ரி இன்டர்பேஸ் எனும் ராணுவ தொழில் உபகரணங்கள் கண்காட்சி இந்திய ராணுவத்தின் தென்னிந்தியப் பிரிவின்கீழ் நடத்தப்படுகிறது.

நமது நாட்டில் தயாராகும் பாதுகாப்புத் துறை உபகரணங்களின் கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கும் வகையிலும், இந்தியா தனது ராணுவ தளவாட உற்பத்தியில் முழு நிறைவு பெறுவதை நம்பிக்கை அளிக்கும் வகையிலும் நடத்தப்படும் இக்கண்காட்சியில், இந்திய ராணுவ தளவாடங்கள், ராணுவ தளவாட தொழில் சார்ந்த உற்பத்திப்பொருள்கள் காட்சிப்படுத்தப்படுகின்றன. இக்கண்காட்சியில் இந்திய தரைப்படை, விமானப் படை, கப்பல் படை, தொழில் துறை, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஆகியவற்றுடன் பல்வேறு அரசுத் துறைகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில் துறை சார்ந்த அமைப்புகள் பங்கேற்கின்றன.

வலம்புரி ராஜகணபதி கோயில் கும்பாபிஷேகம்

பெ.நா.பாளையம், மே 26: பெரியநாயக்கன் பாளையத்தை அடுத்த கவுண்டம்பாளையத்தில் ஸ்ரீவாராஹி பீடம் சண்மதாலயத்தில் உள்ள ஸ்ரீவலம்புரி ராஜகணபதி கோயில் கும்பாபிஷேகம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இக்கோயில் கும்பாபிஷேக விழா வெள்ளிக்கிழமை தொடங்கிய நிலையில், கவுண்டம்பாளையம் மாரியம்மன் கோயிலில் இருந்து கும்ப கலசங்கள் மற்றும் முளைப்பாரி ஊர்வலம் நடைபெற்றது. தொடர்ந்து, கோயில் முன் அமைக்கப்பட்டிருந்த யாக சாலையில் முதற்கால வேள்வி, தீபாராதனைகள் நடைபெற்றன.

இதையடுத்து, இரண்டு மற்றும் மூன்றாம் கால யாக வேள்விகள் கோபுர கலசம் மற்றும் மூர்ஷிக வாகனத்துக்கான அஸ்ட பந்தனை எந்திர ஸ்தாபனங்கள் சனிக்கிழமை காலை நடைபெற்றன. ஞாயிற்றுக்கிழமை காலை 5 மணியளவில் நான்காம் கால யாக வேள்வியில் நாடி சந்தானம், பூர்ணாஹுதி நடைபெற்றன. பின்னர், புனிதநீர் அடங்கிய தீர்த்த குடங்கள் கோயிலைச் சுற்றி ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு, காலை 8 மணியளவில் கோபுர கலசத்துக்கு கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. இதனை ஸ்ரீவாராஹி மணிகண்ட சுவாமிகள் நடத்திவைத்தார்.

தொடர்ந்து அன்னதானம், சிவவாத்ய நிகழ்ச்சி, பஜனைகள் நடைபெற்றன. இவ்விழாவில், ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு விநாயகரை வழிபட்டனர். விழாவுக்கான ஏற்பாடுகளை கோயில் நிர்வாகிகள் செய்திருந்தனர்.

சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்த ஸ்ரீ வலம்புரி ராஜகணபதி.

ரூ.2.79 லட்சம் மதிப்பிலான மளிகைப் பொருள்கள் திருட்டு

கோவை,மே 26: கடலூரில் இருந்து கோவைக்கு லாரியில் கொண்டுவரப்பட்ட ரூ.2.79 லட்சம் மதிப்பிலான மளிகைப் பொருள்கள் திருடுபோனது தொடர்பாக போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கோவை, கவுண்டம்பாளையத்தைச் சேர்ந்தவர் பிரேம் பிரசாத் (35). இவர் சாய்பாபா காலனி அருகே மளிகைக் கடை நடத்தி வருகிறார். இவர் தனது கடைக்குத் தேவையான மளிகைப் பொருள்களை கடலூர் மாவட்டம், செம்மாண்டம் தொழிற்பேட்டையில் இருந்து லாரி மூலம் கோவைக்கு கொண்டுவருவது வழக்கமாம்.

அதன்படி, கடைக்குத் தேவையான ரூ.26.74 லட்சம் மதிப்பிலான மளிகைப் பொருள்களை கடலூரில் இருந்து வாங்கி, லாரி மூலம் கோவைக்கு கொண்டு வந்துள்ளார். பின்னர், அந்த மளிகைப் பொருள்களை கிடங்கில் இறக்கி சனிக்கிழமை சரிபார்த்த போது ரூ.2 லட்சத்து 79 ஆயிரத்து 657 மதிப்பிலான பொருள்களைக் காணவில்லையாம்.

இது குறித்து சாய்பாபா காலனி காவல் நிலையத்தில் பிரேம் பிரசாத் புகார் அளித்தார். வழக்குப் பதிவு செய்த போலீஸார், மளிகைப் பொருள்கள் திருடுபோனது குறித்து விசாரித்து வருகின்றனர்.

திறந்த நிலையில் உள்ள மின்பெட்டிகளால் விபத்து அபாயம்

கோவை, மே 26: கோவையில் தெரு விளக்குகள் அமைக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மின்பெட்டிகளில் கதவுகள் பொருத்தப்படாமல் உள்ளதால் விபத்து ஏற்படும் அபாயம் உள்ளது.

இது தொடர்பாக, கோவை கன்ஸ்யூமர் வாய்ஸ் அமைப்பு செயலாளர் நா.லோகு கூறியதாவது:

வரதராஜபுரத்தில் கதவில்லாமல் பாதுகாப்பற்ற முறையில் காணப்படும் மின்பெட்டி.

கோவையில் பெரும்பாலான இடங்களில் உள்ள மின்பெட்டிகள் கதவுகள் இல்லாமல் திறந்த நிலையில் உள்ளன. இதனால், மின்கசிவு ஏற்பட்டு விபத்து ஏற்படும் நிலை உள்ளது.

மக்கள் அதிகம் கூடும் இடங்களில் கதவுகளற்ற, பாதுகாப்பின்றி காணப்படும் இந்த மின்பெட்டிகளில், அந்தந்த பகுதிகளில் உள்ள சிலர் மாலை நேரத்தில் தெருவிளக்குகளை எரிய வைப்பதற்காக ஸ்விட்சை போடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும், திறந்த நிலையில் உள்ள மின் பெட்டிகளில் வயர்கள் பழுதாகியுள்ளன.

மாநகராட்சிப் பகுதியில் உள்ள பூங்காக்களில் உள்ள மின் பெட்டிகள் மிகவும் பாதுகாப்பற்ற முறையில் தாழ்வான நிலையில் உள்ளதால் பூங்காவுக்கு நடைப்பயிற்சி செல்வோர், விளையாடச் செல்லும் சிறுவர், சிறுமிகளுக்கு மின்விபத்து ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே, மின்வாரியமும் மாநகராட்சி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளும் இணைந்து அனைத்து பகுதிகளில் உள்ள தெருவிளக்கு மின்பெட்டிகளுக்கு உடனடியாக கதவுகள் பொருத்தி முறையாக பராமரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

நூல் அறிமுகக் கருத்தரங்கம்...

கோவை, அண்ணாமலை அரங்கில் வ.உ.சி. ஆய்வு வட்டம் சார்பில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நூல் அறிமுகக் கருத்தரங்கில் 'சுதேசி ஸ்டீம்' எனும் நூலுடன் (இடமிருந்து) ஆய்வு வட்டத் தலைவர் ரெங்கையா முருகன், கே.சிவசுப்பிரமணியம், நூலாசிரியர் ஆ.இரா.வேங்கடாசலபதி, புதுமலர் இதழ் ஆசிரியர் கண.குறிச்சி, எழுத்தாளர் பாமரன்.

காட்டு யானை தாக்கியதில் முதியவர் காயம்

மதுக்கரை, மே 26: சின்னாம்பதி பழங்குடி கிராமத்தில் காட்டு யானை தாக்கியதில் முதியவர் படுகாயமடைந்தார்.

கோவை - கேரள எல்லையான வாளையாறு பகுதியில் மாவுத்தம்பதி ஊராட்சிக்குள்பட வனப் பகுதியில் சின்னாம்பதி, புதுப்பதி ஆகிய பழங்குடி கிராமங்கள் உள்ளன.

இக்கிராமங்கள் வனப் பகுதியில் அமைந்துள்ளதால் வனவிலங்குகளின் நடமாட்டம் எப்போதும் காணப்படும்.

இந்நிலையில், சின்னாம்பதி பழங்குடி கிராமத்துக்குள் கடந்த வாரம் நுழைந்த காட்டு யானை மூதாட்டி ஒருவரை தாக்கியது.

மேலும், நடுப்பதி பழங்குடி கிராமத்தைச் சேர்ந்த வீரால் என்ற பெண்ணை வெள்ளிக்கிழமை தாக்கியது.

இந்நிலையில், சின்னாம்பதி கிராமத்துக்குள் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நுழைந்த காட்டு யானை, வீட்டின் வாசலில் நின்று கொண்டிருந்த சின்னநீலன் (60) என்பவரை தாக்கியது.

அவரின் அலறல் சப்தம் கேட்டு வந்த அக்கம்பக்கத்தினர் யானையை விரட்டி சின்ன நீலனை மீட்டனர். யானை தாக்கியதில் படுகாயமடைந்த அவர் கோவை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது குறித்து வனத் துறையினர் விசாரித்து வருகின்றனர்.

குட்டையில் மூழ்கி தந்தை, மகள் உள்பட 3 பேர் உயிரிழப்பு

சூலூர், மே 26: சூலூர் அருகே குட்டையில் குளிக்கச் சென்ற தந்தை, மகள் உள்பட 3 பேர் நீரில் மூழ்கி ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தனர்.

கோவை மாவட்டம், சூலூர் அருகேயுள்ள சுண்டக்காமுத்துரைச் சேர்ந்தவர் மணிகண்டன். இவரது மகள் தமிழ்ச்செல்வி (15).

மணிகண்டனின் அண்ணன் மகள் புவனா (13). 3 பேரும் வீட்டுக்கு அருகேயுள்ள குட்டையில் குளிப்பதற்காக ஞாயிற்றுக்கிழமை சென்றுள்ளனர். சிறுமிகள் இருவரும் குளித்துக் கொண்டிருந்த நிலையில் குட்டையில் மூழ்கியுள்ளனர்.

இதனைப் பார்த்த மணிகண்டன் அவர்களைக் காப்பாற்ற குட்டையில் இறங்கிய நிலையில் அவரும் மூழ்கியுள்ளார். இதில், 3 பேரும் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். வெகுநேரமாகியும் 3 பேரும் வீடுதிரும்பாததால் மணிகண்டனின் மனைவி அவர்களைத் தேடி குட்டைக்கு வந்துள்ளார். அப்போது, உடைகள் மட்டும் கரையோரத்தில் இருந்தநிலையில், அங்கு 3 பேரும் இல்லாததால் ஊர் மக்களுக்கு தகவல் தெரிவித்துள்ளார்.

அவர்கள் குட்டையில்இறங்கிதேடியாரையும் கண்டுபிடிக்க முடியாததால் தீயணைப்பு நிலையத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

மணிகண்டன், புவனா, தமிழ்ச்செல்வி.

சம்பவ இடத்துக்கு வந்த தீயணைப்பு வீரர்கள் சுமார் 1 மணி நேரத்துக்கும்மேலாக தேடி 3 பேரின் சடலங்களையும் மீட்டனர்.

தகவலறிந்து சம்பவ இடத்துக்கு வந்த சுல்தான்பேட்டை போலீஸார், சடலங்களை உடற்கூறாய்வுக்காக சிங்காநல்லூர் இஎஸ்ஐ அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். இச்சம்பவம் குறித்து போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

சர்ச்சை பதிவு: இந்து முன்னணி நிர்வாகி மீது வழக்குப் பதிவு

கோவை,மே 26: சமூக வலைதளங்களில் சர்ச்சைக்குரிய வகையில் பதிவிட்டதாக இந்து முன்னணி நிர்வாகி மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

கோவை, ரத்தினபுரி காவல் நிலைய உதவி ஆய்வாளர் மீனாட்சிசுந்தரம், ஃபேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைதளங்களை சனிக்கிழமை ஆய்வு செய்துள்ளார்.

அப்போது, இந்து முன்னணி அமைப்பின் தொழில் வர்த்தக பிரிவு பொறுப்பாளர் வெங்கடேஷ் (35) என்பவர் மத ரீதியாக சர்ச்சைக்குரிய மற்றும் ஆட்சேபகரமான பதிவுகளை ஃபேஸ்புக்கில் வெளியிட்டிருந்தது தெரிய வந்தது.

இது தொடர்பாக மீனாட்சி சுந்தரம் அளித்தப் புகாரின்பேரில், ரத்தினபுரி போலீஸார் வெங்கடேஷ் மீது வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

COMMERCIAL SITE FOR SALE @ SATHY ROAD

Kovilpalayam to Senthampalayam Main Road face
12 CENTS
Bank Loan Available
99520 00010
90427 12255

புண்யா அறக்கட்டளை ஆண்டு விழா

புண்யா அறக்கட்டளையின் 10- ஆவது ஆண்டு விழாவில் பங்கேற்றோர்.

கோவை, மே 26: கோவை புண்யா அறக்கட்டளையின் 10-ஆவது ஆண்டு விழா கொண்டாடப்பட்டது.

கணபதி சிஎம்எஸ் மெட்ரிக். மேல்நிலைப் பள்ளியில் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் நலம் விரும்பிகளை ஒருங்கிணைத்து நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சியில் தொழிலதிபர் பிரேம்குமார் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு, கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய தோடு, தகுதியான மாணவர்களுக்கு ஆதரவளிக்கும் அறக்கட்டளையின் முயற்சியை பாராட்டினார்.

இந்நிகழ்ச்சியில், புண்யா அறக்கட்டளைத் தலைவர் சுஜித், செயலாளர் ராமகிருஷ்ண பிரபு, பொருளாளர் பிரேம் சந்த் ஆகியோருடன் அறங்காவலர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். புண்யா அறக்கட்டளை தமிழகம், கேரளம், கர்நாடகம், ஆந்திரம், தெலங்கானா, புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் 520 மாணவர்களின் கல்விக்கு ஆதரவளித்துள்ளதாக அறக்கட்டளையின் நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

சிறுவாணி அணையின் நீர்மட்டம் 12 அடியாக உயர்வு

கோவை, மே 26: சிறுவாணி அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், அணையின் நீர்மட்டம் 12 அடியாக உயர்ந்துள்ளது.

கோவை மாநகரப் பகுதிகளில் 26 வார்டுகள், நகரையொட்டிய கிராமங்களுக்கு பிரதானகுடிநீர் ஆராதாரமாக சிறுவாணி அணை விளங்குகிறது. கடந்த பிப்ரவரி மாத இறுதியில் இருந்து வெயிலின் தாக்கம் அதிகமானதால் அணையின் நீர்மட்டம் படிப்படியாகக் குறைந்தது. கடந்த மாதங்களில் 5 அடிக்கும் குறைவான அளவே நீர் இருந்தது. இதனால், அணையில் இருந்து தண்ணீர் உறிஞ்சும் 3 வால்வுகளும் வெளியே தெரிந்தன.

இந்நிலையில், சிறுவாணி அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் கடந்த சில நாள்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால், அணைக்குச் செல்லும் முக்தியாறு, பட்டியாற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால், அணையின் நீர்மட்டமும் வேகமாக உயர்ந்து வருகிறது.

அதன்படி, கடந்த வாரம் 10 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை நிலவரப்படி 12 அடியாக உயர்ந்துள்ளது. அடுத்த மாதம் தென்மேற்கு பருவமழை கைகொடுத்தால் ஜூலை மாதத்தில் அணை முழுக் கொள்ளளவை எட்ட வாய்ப்புள்ளது என குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

AMBIKA COTTON MILLS LIMITED
Regd. Office: 9-A, Valluvar Street, Sivanandha Colony, Coimbatore-641 012.
CIN : L17115TZ1988PLC002269
Phone:0422-2491504, Fax:0422-2499623
website: www.acmills.in, email: ambika@acmills.in

STATEMENT OF AUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER / YEAR ENDED 31.03.2024
(Rs. In Lakhs,except per share data)

Particulars	Quarter Ended			Year Ended	
	31.03.2024	31.12.2023	31.03.2023	31.03.2024	31.03.2023
	(Audited)	(Unaudited)	(Audited)	(Audited)	
1. Total Income from Operations	20963	20017	19028	84621	86135
2. Operating Profit	3421	3117	3535	13202	18870
3. Finance Cost	513	613	301	1907	640
4. Gross Profit	2908	2504	3234	11295	18230
5. Depreciation	723	684	749	2770	2982
6. Net profit/(Loss) for the period (before tax and exceptional items)	2185	1820	2485	8525	15248
7. Net profit/(Loss) for the period before tax (after exceptional items)	2185	1820	2485	8525	15248
8. Net profit/ (Loss) for the period after tax (after exceptional items)	1609	1302	1813	6298	11190
9. Other Comprehensive Income	-66	0	-11	-66	-11
10. Total Comprehensive income for the period (Comprising Profit / (Loss) for the period (after tax)	1543	1302	1802	6232	11179
11. Equity Share Capital	572.50	572.50	572.50	572.50	572.50
12. Reserves(Excluding Revaluation Reserve) as per Audited Balance Sheet	-	-	-	85317	81089
13. Earnings Per Share (of Rs.10/- each) (for Continuing and discontinued operations)					
a) Basic	28.10	22.74	31.67	110.00	195.45
b) Diluted	28.10	22.74	31.67	110.00	195.45

Note : a) The above is an extract of the detailed format of Financial Result for the Quarter and year ended 31st March, 2024 filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing Obligation and Disclosure requirements) Regulations, 2015. The full format of the Audited Financial Results for the Quarter and year ended 31st March, 2024 is available on the Company's website (www.acmills.in) and on the websites of BSE (www.bseindia.com) & NSE (www.nseindia.com)

b) The Board of Directors have recommended payment of Final dividend of Rs.35/- (350%) per equity share (face value of Rs.10 each) FY 2023-24 subject to approval of shareholders at the Annual General Meeting.

For Ambika Cotton Mills Limited
S/d
P.V.Chandran
Chairman & Managing Director
DIN:00628479

Place : Coimbatore
Date : 25.05.2024

பொது அறிவிப்பு

இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில், கதவு எண்: 1/1524, 1-ஆவது தளம், சாய் கிருஷ்ணா காம்பிளக்ஸ், வரதராஜ் மில்ஸ் எதிரில், பீளமேடு, கோயம்புத்தூர்- 641004 என்ற முகவரியில் தற்போது அமைந்துள்ள எமது KLM ஆக்சிவா கூபின்கூபெஸ்ட் லிட்., பீளமேடு கிளையின் கிளை அலுவலகமானது கதவு எண்: 490, 496, முதல் தளம், சிட்டி யூனியன் பேங்க் எதிரில், திருச்சி சாலை, சிங்காநல்லூர், கோயம்புத்தூர் - 641005 என்ற முகவரியில் அமைந்துள்ள எமது சிங்காநல்லூர் கிளையுடன் இணைக்கப்பட / இடமாற்றம் செய்யப்பட உள்ளது. இது 27 ஆகஸ்ட் 2024-இல் இருந்து அமலுக்கு வரும்.

KLM ஆக்சிவா கூபின்கூபெஸ்ட் லிட்.,
கிளை மேலாளர், பீளமேடு கிளை

ஃபெட்பாங்க் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட். ஏல அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிப்பது யாதெனில், மிகைக்கடன் கீழுள்ள அல்லது கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறிய அல்லது வரம்பைக் கடந்து விட்ட வாடிக்கையாளர்களின் கடன் கணக்குகளுக்குச் (கீழே குறிப்பிடப்பட்டுள்ளது) சொந்தமான தங்க நகைகளை ஃபெட்பாங்க் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்., நிறுவனம் ஏலமிட முடிவு செய்துள்ளது. இந்த ஏலமானது கீழே குறிப்பிடப்பட்டுள்ள உரிய கிளைகளில் 07.06.2024, வெள்ளிக்கிழமை அன்று காலை 10:00 மணிக்கும் நண்பகல் 12:00 மணிக்கும் இடையில் நடைபெறும். ஏல நடைமுறை நிறைவடையும் வரை ஏலம் தொடரும்.

காந்திபுரம் 9600524952, 0422- 4374156 FEDGL0216 0005275, 0005281 கவுண்டம்பாளையம் 8015133131,0422- 4347254 FEDGL0223 0009056, 0009063, 0009064, 0009901 ராமகிருஷ்ணாபுரம் 9791664812,0422 -4280037 FEDGL0199 0007692, 0007696, 0007873, 0007655 ராமநாதபுரம் 8807095198, 0422- 4519094 FEDGL0023 0008336, 0008337, 0008382, 0008383 சாய்பாபா காலனி 7010835497, 0422- 4382186 FEDGL0213 0006679, 0006683, 0006711, 0006712 அவிநாசி சாலை 9677520707, 0421-4325485 FEDGL0024 0006662 தாராபுரம் சாலை 9095308107, 0421-4324485 FEDGL0195 0007644, 0007648, 0007664, 0007665, 0007674, 0007681, 0007683, 0007687 மங்கலம் சாலை 9442842075, 0421 4350726 FEDGL0192 0010376, 0010389, 0010402, 0010403, 0010404, 0010999 P N சாலை 9677889944, 0421-4323485 FEDBD0211 0000106 பல்லடம் சாலை 9003878370, 0421 4248258 FEDGL0214 0007256, FEDDS0214 0000016

நேரத்திலோ இடத்திலோ மாற்றம் ஏதும் ஏற்பட்டால் அது குறித்து எமது www.fedfina.com இணையத்தளத்தில் தெரிவிக்கப்படும். ஏலத்தில் கலந்து கொள்ளும் ஏலதாரர்கள் அனைவருக்கும் அவர்கள் ஏலப்புள்ளிகளைத் தாக்கல் செய்ததையடுத்து அவை தேர்ந்தெடுக்கப்பட்டனவா தள்ளுபடி செய்யப்பட்டனவா என்பது தெரிவிக்கப்படும். நகைகளை மீட்க விரும்பும் வாடிக்கையாளர்கள் 06.06.2024 அன்று அல்லது அதற்கு முன் தாங்கள் நகைகளை அடமானம் வைத்த கிளையை நேரிடையாக அணுகலாம் அல்லது மேற்குறிப்பிட்ட தொடர்பு எண்ணை அழைக்கலாம். இது தொடர்புடைய விதிமுறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டது.

ஏலமானது அந்தந்தக் கிளைகளில் நடத்தப்படும் நிலையில் ஏதேனும் காரணத்தால் குறிப்பிட்ட நாளில் ஏலம் நிறைவடையாவிட்டால் ஏலமானது அடுத்து வரும் வேலை நாளில் மாவட்ட அளவிலான கிளையில் நடத்தப்படும். இது பற்றிய விவரங்கள் முன்னரே எமது இணையத்தளத்தில் வெளியிடப்படும். இந்த ஏல நடவடிக்கை குறித்து மேற்கொண்டு தகவல் எதுவும் வெளியிடப்படமாட்டாது.

நாள்: 27.05.2024
இடம்: கோயம்புத்தூர்

ஒம்- அதிகாரப்பூர்வக் கையொப்பதாரர், சார்பில்
ஃபெட்பாங்க் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்.,